**SC.No. 153/2022**
**நாள். 09.03.2026.**
**அ.சா. 21 டாக்டர் . அருள்மோகன் த/பெ. அங்கா ரெட்டி**
(எதிரிகள் ஆஜர்)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

வழக்கின் சரித்திரம் எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கின் விபத்து பதிவேட்டு நகலை பார்த்தேனா என்றால் இல்லை. இரசாயான பகுப்பாய்வு அறிக்கையில் இறந்த நபரின் வயிற்றில் எத்தில் ஆல்கஹால் 776 மி.கி இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதால் இறந்த நபர் இறப்பதற்கு முன்பாக மிக அதிக போதையில் இருந்திருப்பார் என்றால் சரிதான். மிக அதிக போதையில் சிறு மூளை பாதிக்கப்பட்டு நிதானம் தவறியிருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். இறந்த நபரின் உடலில் இருந்த காயங்கள் அனைத்தும் சிதைந்த காயங்கள் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அரிவாள் போன்ற கூர்மையான ஆயுதத்தால் வெட்டும்போது வெட்டுக்காயங்கள்தான் ஏற்படும் என்றும் சிதைந்த காயங்கள் ஏற்படாது என்றால் சரியல்ல. கூர்மையற்ற ஆயுதங்களால் வெட்டும்போதுதான் சிதைந்த காயங்கள் ஏற்படும் என்றால் சரிதான். கம்பு, கட்டை போன்ற ஆயுதங்களால் தாக்கும்போது சிதைந்த காயங்கள் ஏற்படாது என்றும் இரத்தக்கட்டு, சிராய்ப்பு காயங்கள்தான் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். என்னுடைய பிரேத பரிசோதனை அறிக்கையில் இறப்பின் நேரம் குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறியுள்ள கருத்து போலிசார் சேட்டுக்கொண்டதற்கிணங்க வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அரிவாள், கட்டை போன்ற ஆயுதங்களால் தாக்கும்போது இறந்த நபருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.